**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No.30/2024**

Deposition of witness for **PW1** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Gowsleya | Husband Name | : | Jayasankar |
| Village | : | | Age | : | |

**நாள்:12.02.2026.**

**ம.சா.1. முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் மனுதாரர், ம.சா.1 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அசல் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யவேண்டுகிறேன்.

| S.No | Exhibits | Description |
|---|---|---|
| 1 | ம.த.சா.ஆ.1 | 08.04.2024 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை கார்பன் நகல் |
| 2 | ம.த.சா.ஆ.2 | 07.04.2024 ம் தேதியிட்ட காவேரி மருத்துவமனையின் விடுவிப்பு சான்றிதழ் |
| 3 | ம.த.சா.ஆ.3 | TN 24 BC 5013 என்ற வாகனத்தின் பதிவு சான்று ஜெராக்ஸ் நகல் |
| 4 | ம.த.சா.ஆ.4 | TN 24 BC 5013 என்ற வாகனத்தின் காப்பீடு பாலிசி ஜெராக்ஸ் நகல் |
| 5 | ம.த.சா.ஆ.5 | மனுதாரின் வங்கி கணக்கு புத்தகம் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது. |
| 6 | ம.த.சா.ஆ.6 | மனுதாரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது. |
| 7 | ம.த.சா.ஆ.7 | மனுதாரின் PAN Card ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது. |
| 8 | ம.த.சா.ஆ.8 | காவேரி மருத்துவமனையின் பில்கள் ரூ.42,897/- |

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்**

விபத்தின் போது இராய்கோட்டை டு கிருஷ்ணகிரி நோக்கி சென்று கொண்டிருந்தோம். போடம்பட்டி பிரிவு சாலையில் விபத்து ஏற்பட்டது. காவல்

நிலையத்தில் புகார் நான் தான் கொடுத்தேன். விபத்து நடந்து 4 நாள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். பல்சர் வாகனம் எங்களுக்கு பின்புறம் வந்தது என்றால் சரிதான். இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக எங்களது அஜாக்கிரதையை மறைத்து பொய்யாக புகார் கொடுத்தால் தான் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை என் ஓட்ட நான் பின்புறம் உட்கார்ந்து சென்றேன் என்றால் சரிதான். என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. விபத்தின் போது நாங்கள் சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். எனது கணவர் ரோட்டில் பள்ளம் இருந்ததால் திடீரென பிரேக் பிடித்தால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்ட உடன் முதலில் ராயக்கோட்டை விக்னேஷ் மருத்துவமனையில் சிகிச்சை பார்த்தேன். அதற்கு பிறகு ஓசூர் காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பார்த்தேன். எனக்கு இடது பக்க இடுப்பு மற்றும், வலது முலங்கையில் அடிப்பட்டிருந்தது. எனக்கு இடதுபக்க இடுப்பில் எலும்புமுறிவு ஏற்பட்டிருந்தது. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவமனைபில்களை மருத்துவமனை நிர்வாகத்தை விசாரித்து நிருப்பித்தால் எனக்கு கிடைக்க தக்கது என்றால் சரியல்ல. நான் இல்லத்தரியாக இருந்து வருகிறேன். இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்றும் எனக்கு வருமான இழப்போ, நிரந்தர ஊனமோ, செயல் திறன் குறைபாடோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1 வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓடுட்டுநர் உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. 1 வது எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் பாலிசி விதிமீறல் உள்ளது என்பதால் எனக்கு இழப்பீடு ஏதாவது கிடைக்கேவேண்டும் என்றால் நான் 1 வது எதிர்மனுதாரிடம் தான் கேட்கவேண்டும் என்றால் சரியல்ல. 2 வது எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.